**பிரிவு 10: வழக்கு நிறுத்தி வைத்தல் (Stay of suit)**

- பிரச்சினையில் உள்ள விஷயம் (matter in issue), நேரடியாகவும், கணிசமானதாகவும், முன்பு நிறுவப்பட்ட வழக்கின் பிரச்சினையில் உள்ளது; மற்றும்
- அந்த வழக்கு அதே கட்சிகளுக்கு இடையே, அல்லது அவர்கள் அல்லது அவர்களில் எவரேனும் அதே உரிமையின் கீழ் வழக்குத் தொடுப்பதாகக் கூறும் கட்சிகளுக்கு இடையே உள்ளது; மற்றும்
- அத்தகைய வழக்கு, கோரப்பட்ட நிவாரணத்தை வழங்குவதற்கான அதிகார வரம்பு உள்ள அதே அல்லது இந்தியாவில் உள்ள வேறு ஏதேனும் நீதிமன்றத்தில், அல்லது
  இந்தியாவின் எல்லைக்கு அப்பால் மத்திய அரசால் நிறுவப்பட்ட அல்லது தொடரப்படும் அதே போன்ற அதிகார வரம்பைக் கொண்ட எந்த நீதிமன்றத்திலும் அல்லது உச்ச நீதிமன்றத்தின் முன் நிலுவையில் இருந்தால்,
    - எந்தவொரு நீதிமன்றமும் எந்தவொரு வழக்கின் விசாரணையையும் தொடராது.

<u>விளக்கம்-</u>வெளிநாட்டு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பது, இந்தியாவில் உள்ள நீதிமன்றங்கள், அதே காரணத்திற்காக நிறுவப்பட்ட வழக்கை முயற்சி செய்வதைத் தடுக்காது.

சட்டத்தின் பிரிவு 10, நீதிமுறை விசாரணையில் இருக்கும் வழக்கு கருப்பொருள் (Res Sub Judice ) கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது.

**நிபந்தனைகள்:** பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் இந்தப் பிரிவு பொருந்தும்.

1) இரண்டு வழக்குகள் இருக்கின்றன. முதலில் போடப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது.
2) முன்னர் நிறுவப்பட்ட வழக்கிலும், பின்னர் நிறுவப்பட்ட வழக்கிலும் உள்ள பிரச்சினை நேரடியாக கணிசமாக ஒரே மாதிரியானவை.
3) இரண்டு வழக்குகளிலும், ஒரே கட்சிகள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் வழக்குக்கு கட்சிகளாக இருக்கின்றனர்.
4) வழக்கில் உள்ள தரப்பினர் இரண்டு வழக்குகளிலும் ஒரே சட்டப்பூர்வ உரிமையின் கீழ் வழக்கு தொடர்ந்துள்ளனர்.
5) முந்தைய வழக்கு அதே நீதிமன்றத்தில் அல்லது வேறு ஏதேனும் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்க வேண்டும்.
6) நீதிமன்றம் இந்தியாவில் இருக்கலாம். அது இந்திய எல்லைக்கு அப்பாற்பட்ட நீதிமன்றமாக இருந்தால், அது மத்திய அரசால் நிறுவப்பட்ட அல்லது தொடரும் நீதிமன்றமாக இருக்க வேண்டும் மற்றும் அதிகார வரம்பைக் கொண்டிருக்க வேண்டும்.
7) முன்பு நிறுவப்பட்ட வழக்கைக் கையாளும் நீதிமன்றம், அடுத்த வழக்கில் கோரப்பட்ட நிவாரணத்தை வழங்க தகுதியுடையது.
8) வெளிநாட்டு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பது, அதே நடவடிக்கைக்கான காரணத்தின் அடிப்படையில் நிறுவப்பட்ட வழக்கை விசாரணை செய்வதிலிருந்து இந்தியாவில் உள்ள நீதிமன்றங்களைத் தடுக்காது.

**கட்டாயம் (Mandatory):** பிரிவில் உள்ள ‘வேண்டும்’ (shall) என்ற வார்த்தை வழக்கைத் தொடராமல் இருப்பதைக் கட்டாயமாக்குகிறது. வழக்கு, பின்னர் நிறுவப்பட்ட நீதிமன்றத்தின் அறிவுக்குக் கொண்டு வரப்பட்ட தருணத்திலிருந்து, நீதிமன்றம் அத்தகைய வழக்கின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டும்.

**பிரச்சினையில் உள்ள விஷயம் (matter in issue): தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனம் எதிர் சி.பரமேஸ்வரா, (National Institute of Mental Health & Neuro Sciences vs C.Parameshwara, 2005 2 SCC 256)** என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் இவ்வாறு கூறியது.

- பிரிவு 10ஐ ஈர்ப்பதற்கான அடிப்படைச் சோதனையானது, முந்தைய வழக்கில் இறுதி முடிவு எட்டப்பட்டாலும், அத்தகைய முடிவு அடுத்த வழக்கிற்கு மறு-தீர்ப்புத்தடையாகச் (res-judicata) செயல்படும். இரண்டு வழக்குகளிலும் உள்ள கருப்பொருள் (subject matter) முழுவதும் ஒரே மாதிரியாக இருக்கும் சந்தர்ப்பங்களில் மட்டுமே பிரிவு 10 பொருந்தும்.
- பிரிவு 10 இல் உள்ள முக்கிய வார்த்தைகள், முந்தைய நிறுவப்பட்ட வழக்கில் "பிரச்சினையில் உள்ள விஷயம் நேரடியாகவும் கணிசமாகவும் பிரச்சினையில் உள்ளது" (directly and substantially in issue) என்பதாகும். "நேரடியாகவும் கணிசமாகவும் பிரச்சினையில்" என்ற வார்த்தைகள் "தற்செயலாக அல்லது இணையாக பிரச்சினையில்" (“incidentally or collaterally in issue”) என்ற வார்த்தைகளுக்கு முரணாக பயன்படுத்தப்படுகின்றன.

எனவே, இரண்டு வழக்குகளிலும் பிரச்சினையில் உள்ள விஷயத்தின் அடையாளம் இருந்தால் மட்டுமே பிரிவு 10 பொருந்தும். இரண்டு நடவடிக்கைகளிலும் உள்ள முழு விஷயமும், ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்.

**இடைநிலை உத்தரவுகள்:** (**Interlocutory orders):** இந்த விதி, நடைமுறை விதியின் (rule of procedure) இயல்பில் உள்ளது. மற்றும் பிற்கால வழக்கை கையாளும் நீதிமன்றத்தின் அதிகார வரம்பைப் பாதிக்காது அல்லது விவகாரங்களில் எந்தவொரு முக்கிய உரிமையையும் உருவாக்காது.

முந்தைய வழக்கோடு, பிந்தைய வழக்கை ஒருங்கிணைப்பதற்கான உத்தரவு, அல்லது பெறுநரை (receiver) நியமித்தல், அல்லது தடை உத்தரவு, அல்லது தீர்ப்புக்கு முன் பற்றுகை செய்தல் போன்ற இடைக்கால உத்தரவுகளை நீதிமன்றங்கள் பிறப்பிப்பதை இப்பிரிவு தடை செய்யாது.

**விசாரணை (trial**): **இந்தியன் வங்கி எதிர் மகாராஷ்டிரா மாநில கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு லிமிடெட் (Indian Bank Vs. Maharashtra State Co-operative Marketing Federation Ltd., AIR 1998.SC 1952):** பிரிவு 10-ன் படி, நீதிமன்றம் பின்பற்ற வேண்டிய நடவடிக்கை, வழக்கின், விசாரணையைத் (trial) தொடரக்கூடாது என்பது. ஆனால், இரண்டாவதாக வந்த வழக்கை, வேறு வகையில், வேறு நோக்கங்களுக்காக கையாளக் கூடாது என்று அர்த்தமல்ல.

**தீர்ப்பாணை செல்லாதது அல்ல**: **புக்ராஜ் டி. ஜெயின் எதிர் ஜி. கோபாலகிருஷ்ணா (Pukhraj D. Jain vs G. Gopalakrishna (2004 7 SCC 251)** வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது.

- பிரிவு 10-ன் கீழ் ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்வது, அந்த விஷயத்தின் தகுதிகளை ஆராய நீதிமன்றத்தின் அதிகாரத்தின் மீது

எந்த வகையிலும் தடையை ஏற்படுத்தாது. இந்தப் பிரிவின் நோக்கம், ஒரே நேரத்தில், இரண்டு வழக்குகளில் ஒரே பிரச்சினையில் உள்ள விஷயம் குறித்து, நீதிமன்றங்கள் விசாரணை செய்வதைத் தடுப்பதாகும். பிரிவு 10 ஒரு நடைமுறை விதியை மட்டுமே இயற்றுகிறது. அதை மீறி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை செல்லாதது ஆகாது.

- இரண்டாவதாக, நிறுவப்பட்ட வழக்கை ஆதாரம் எடுக்காமலேயே முற்றிலும் சட்டப்பூர்வ கேள்விகள் வழி முடிவு செய்ய முடியும் என்றால், அத்தகைய வழக்கை நிலுவையில் வைத்திருக்காமல், அது தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.